ஆயர் திருமுகம்
Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

Pastoral Letter No/GR/38/2019

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

சீரோ-மலபார் திருவழிபாட்டு முறைப்படி இன்று முதல் நாம் தவக்காலத்தில் நுழைகின்றோம். நாளைய தினம், சாம்பல் திங்கள், நெற்றியில் சாம்பல்பூசி நோன்பு துவங்குகின்றோம். சீரோ-மலபார் மரபுபடி இந்நோன்பு ஏழு வாரங்களை உள்ளடக்கிய ஐம்பது நாட்கள். எனவே இந்நோன்பு 'ஐம்பதுநாள் நோன்பு அல்லது பெரிய நோன்பு' என்றும் அழைக்கப்படுகிறது. இத்தவக்காலம் இயேசு பாலைவனத்தில் நாற்பது நாள் நோன்பு இருந்ததையும் மானிட மீட்புக்காக சிலுவையில் அவர் பட்டப் பாடுகளையும் அவரது மரணத்தையும் மையக்கருத்தாக கொண்டது. இறைவன் ஒருமுறைக்கூட தமது பாஸ்கா விழாவில் பங்கேற்க நமக்கு வாய்ப்பு அளித்திருக்கிறார். நோன்புகாலம் எப்போதும் ஒருவனுடைய ஆன்மீக வாழ்வை செபம், தவம், உபவாசம் மற்றும் ஈகை ஆகியவற்றால் புதுப்பிக்க உதவுகிறது.

நோன்பு இருத்தல் என்பது பழைய ஏற்பாடு முதல் இன்று வரை தொடர்கின்ற ஓர் நிகழ்வாக இருக்கின்றது. இறைவாக்கினரான மோயிசனும் எலியாவும் நாற்பது நாள் நோன்பு இருந்ததாக பழைய ஏற்பாடுநூல் கூறுகிறது. மோயிசன் நாற்பது நாள் இரவும் பகலும் ஆண்டவரிடம் இருந்தார் என்றும், அப்பம் உண்ணவோ தண்ணீர் பருகவோ செய்யவில்லை என்றும் விடுதலைப்பயணம் நூலில் நாம் வாசிக்கின்றோம் (விப 34:28). அவ்வாறே பசியுற்றுயிருந்த எலியா ஆண்டவரின் தூதர் கொடுத்த உணவை உண்டபின் 'நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்' என்று அரசர் ஆகமம் கூறுகின்றது (1 அரச 19:7-8). புதிய ஏற்பாட்டில் இயேசு இம்மரபை கடைபிடித்து நாற்பது நாள் உண்ணா நோன்பு இருந்தார் என்று இறைவல்லுநர்கள் எடுத்துக்கூறுகின்றனர்.

இன்றைய விவிலிய பகுதியான புனித மத்தேயு நற்செய்தி 4 ஆம் அதிகாரம் 1 முதல் 11 வரையுள்ள வசனங்கள் இயேசு நாற்பது நாள் இரவும் பகலும் உண்ணா நோன்பு இருந்ததையும் அவர் அலகையால் சோதிக்கப்பட்டதையும் விவரிக்கிறது. ஒருவரது வாழ்வில் எப்போது சோதனைகள் வரும் என்பதை இவ்விவிலியபகுதி தெளிவுபடுத்துகிறது. சோதனையின் முதல் காரணம் பசி. இயேசு நோன்பின் இறுதியில் பசியுற்றார் என்றும் அதன்பின் இயேசு அலகையால் சோதிக்கப்பட்டார் என்றும் விவிலியத்தில் காண்கிறோம் (மத் 4:2). உணவு என்பது ஒரு மனிதனின் அன்றாட தேவைகளில் ஒன்று. அவ்வாறே பசி என்பதும் அவனது வாழ்வோடு தொடர்புடையது. பசி ஒருவனுடைய சிந்தையையும் சரியான தீர்வு எடுக்கும் திறனையும் கட்டுப்படுத்தும். பசியைப் போக்க ஒருவர் எதையும் செய்ய துணிவார். எனவே அலகை இதை ஒரு ஆயுதமாக எடுத்து அதைக் கொண்டே இயேசுவையும் அலகை சோதித்தது. அவ்வாறே இந்நிகழ்வு ஒருவன் தனிமையில், பசியுற்று, நெருக்கடி மற்றும் அவசரங்களில் இருக்கும்போது சோதனைகள் வரும் என்பதை எடுத்துக்கூறுகின்றது. சோதனையின் இரண்டாவது காரணம், ஒருவனுடைய மாட்சியும் புகழுமே. மத்தேயு நற்செய்தியில் இயேசு அலகையால் சோதிக்கப்படும்முன் “என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று தந்தையாகிய கடவுளால் யோர்தானில் வைத்து சான்று பகிரப்பட்டார் (மத் 3:13-17). இறைவனின் கொடைகளையும் ஆசீரையும் பெற்ற ஒருவன் சோதனைக்கு உட்படுத்தபடுவான் என்பதை இப்பகுதி விளக்குகின்றது. இது ஒருவர் கடவுள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும் ஓர் சோதனையாகவும் அமைகின்றது.

அலகை இயேசுவை மூன்று விதத்தில் சோதித்தான். அலகையின் சோதனைகள் அனைத்தும் இயேசுவை தந்தையாகிய கடவுளுக்கு எதிராக பாவம் செய்யத் தூண்டுவதாக அமைந்தது.

இயேசுவின் முதல் சோதனை அவரது பசியை மாற்ற முயலும் ஒன்றாக இருந்தது. ‘நீர் இறைமகன் என்றால் இந்த கற்களை அப்பமாக்கும்’ என்னும் சோதனைக்கு இயேசு உட்படுத்தப்பட்டார். இச்சோதனை தந்தையாகிய கடவுளின் நற்பெயரை கெடுக்கும் வகையிலும் அவருடைய அன்பையும் பராமரிப்பையும் மதியாமல் அவரை மறுக்கும் விதமாகவும் இருந்தது. இச்சோதனை தந்தை மகன் உறவை துண்டிக்கும் ஒன்று. ஆனால் இச்சோதனையை இயேசு “மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்” என்னும் இறைவார்த்தையால் வெற்றிக்கொண்டார் (மத் 4:4).

இயேசுவின் இரண்டாவது சோதனை வேளையில் ‘அலகை எருசலேம் கோயிலின் உயர்ந்த பகுதியில் இயேசுவை நிறுத்தி நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்’ என்று சொல்லி

இறைமகன் இயேசுவின் இறைத்தன்மையை சோதனை செய்தது. அலகை இறைவார்த்தையை தவறாக சித்தரித்து தந்தையாகிய கடவுளின் அதிகாரத்தை சோதனை செய்தது. புனித இடம் எதுவென்றும், எவ்விடத்தில் வைத்து மனிதனை எவ்வாறு சோதிக்க வேண்டும் என்றும் அலகை தெரிந்து வைத்திருப்பதாக இறையியல் வல்லுநர்கள் எடுத்துரைக்கின்றனர். புனித இடத்தில் வைத்து இயேசுவை சோதித்த அலகை மனிடராகிய நம்மையும் புனித இடத்தில் வைத்து சோதிப்பார் என்பதில் எந்த ஐயமும் இல்லை. உயர்ந்த இடம் எப்போதும் கால் நழுவக் கூடிய ஒன்று. எனவே நாம் தற்பெருமைக்கும், இறுமாப்புக்கும் அடிமைகள் ஆகா வண்ணம் இருக்க முயற்சிப்போம். எனவே இறைஆசீர் பெற்று வாழும் நாம் ஒவ்வொருவரும் இன்பத்திலும் துன்பத்திலும் இறை பராமரிப்பபை எப்போதும் உணர்ந்தவர்களாக வாழ முயற்சி செய்வோம். இல்லையேல் அலகை நம் இறுமாப்பைக்கண்டு எளிதில் நம்மை அவனது வலையில் வீழ்த்துவான்.

மூன்றாவது, அலகை ‘நீர் நெடுஞ்சான் கிடையாக விழுந்து என்னை வணங்கு’ என இயேசுவை தூண்டியது. அதற்கு பரிசாக உலக பேரரசுகளையும் அதனுடைய மகிமையையும் தருவதாக வாக்களித்தது. உலக புகழ்ச்சி என்பது ஒருவனை மிக எளிதில் கவரக்கூடிய ஒன்று. அது மனிதனை மிக எளில் கவரவும் அடிமையாக்கவும் செய்யும். அவ்வாறே இயேசுவும் அலகையை வணங்குவதற்காக சோதிக்கப்பட்டார். சில சோதனைகள் எளிதில் மறுக்க முடியாதவை, ஆனாலும் அவற்றை தொடக்கத்திலேயே இறை பெயரால் முறியடிக்க இயலும். இதையே இறை இயேசுவும் ‘உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்’ என்று சொல்லி அலகையை கடவுளுக்கு அடிபணியச்செய்தார். இவ்வாறு நாமும் ஆழமான இறைநம்பிக்கையால் தீய சக்திகளை தோற்கடித்தால் அவன் நம்மை விட்டு விரைவில் அகன்றிடுவான். நம் ஆன்மா அமைதி பெறும்.

இயேசு சோதனைவேளையில் தான் படப்போகின்ற வேதனையின் ஆழத்தை உணர்ந்து கொண்டார் என்று இறைவல்லுநர்கள் கூறுகின்றனர். அவ்வாறே இம்மூன்று சோதனைகளும் இயேசுவின் வெளிப்படையான வாழ்க்கைக்கு தேவையான வலுவை ஊட்டியது. நாமும் நமது சோதனைகளில் தேவையான வலிமையை பெற்றுக்கொள்ள இயேசுவைப்போல இறைவசனங்களின் துணையை நாடுவோம். இத்தவக்காலத்தில் அதிகமாக இறைவார்த்தையை வாசிக்கவும் தியானிக்கவும் இறை வசனங்களுக்கு உருகொடுக்கவும் முயற்சி எடுப்போம். ஆமோஸ் இறைவாக்கினர் இவ்வாறு கூறுகிறார் “தலைவராகிய ஆண்டவர் கூறுகின்றார்: “இதோ நாட்கள் வரப்போகின்றன! அப்போது நாட்டினுள் பஞ்சத்தை அனுப்புவேன்; அது உணவு கிடைக்காத பஞ்சமோ, நீரில்லாத வறட்சியோ அன்று; ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சமே அது” (ஆமோ 8:11). இவ்வசனங்களை இத்தவக்காலத்தில் நாம் மனதில் கொள்வோம்.

அவ்வாறே செபம், நோன்பு, உபவாசம் மற்றும் பிறரன்பு பணிகளில் ஈடுபட இத்தவக்காலத்தில் முயற்சி எடுப்போம். நோன்பு இருந்து சேகரிக்கின்ற தொகையை ஏழைகளுக்கு கொடுத்து உதவுவோம். தான தர்மம் எப்போதும் நமது பாவங்களின் கடுமையை (கோரத்தை) குறைக்கும். இவ்வேளையில் நமது மறைமாவட்டத்தில் நடைபெறுகின்ற ஒருசில நிகழ்வுகளை இத்தோடு இணைக்கின்றேன்.

இவ்வருடம் நமது தவக்கால உதவி நிதியை மனநோயாளிக்காக காரோடில் அமைந்துள்ள தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்திற்கு கொடுக்கின்றோம். மறைமாவட்ட மக்களாகிய நீங்கள் அனைவரையும் நம் சகோதர சகோதரிகளின் நல்வாழ்வுக்கு உதவும் வகையில் நோன்புகால உதவி நிதியில் அனைவரும் முழு மனதுடன் பங்கேற்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்பான இளையோர்களே, இறைவன் உங்களை அழைக்கின்றார். பெற்றோர்களும் பிள்ளைகளும் இவ்வேளையில் இறை அழைத்தலுக்கு செவிமடுத்து குருத்துவ மற்றும் துறவற வாழ்வுக்கு பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும் என்று மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நமது குடும்பங்களிலிருந்து கடவுளுக்காக உழைக்கின்ற ஏராளமான இளைஞர்கள் நமது மறைமாவட்டத்திற்கும் திருச்சபைக்கும் தேவை. இறையழைத்தலின் மேன்மையை மக்களுக்கு உணர்த்தும் வகையில் இவ்வருட ஏப்ரல் மாதத்தை இறையழைத்தல் மாதமாக நமது மறைமாவட்டத்தில் கொண்டாடுகின்றோம். “வந்து பாருங்கள்” என்னும் முக்கிய சிந்தனையுடன் இம்மாதத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் மறைமாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும். இறையழைத்தல் மாத கொண்டாட்டத்தின் தொடக்கவிழா 2019 மார்ச் 31 அன்று எல்லா பங்குகளிலும் நடைபெறும். இம்மாதத்தினுடைய சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் மறைமாவட்ட பக்த இயக்கங்கள் வழியாக உங்களுக்கு வழங்கப்படும்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

25.02.2019

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 03.03.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.*

Bishop’s House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India